**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC.110/2020 | Age :44 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : AW/PW-9 | |
| Name : சுதா, காவல் ஆய்வாளர் | Religion : |
| Father's/Husband's Name : | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20.08.2025.**

**3 ம் எதிரி ஆஜர். 1, 2, 4 மற்றும் 5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது தரப்பில் 317 கு.வி.மு.ச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் நகர தெற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.06.2024 ம் தேதி கும்பகோணம் தாலுக்கா காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது கூடுதல் பொறுப்பாக கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருவிடைமருதூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ஆணையின்பேரில் கும்பகோணம் அனைத்து மகளிர் நிலைய குற்ற எண். 2/2020 ல் சட்டபிரிவுகள் 147, 498 ஏ, 323, , 506(1), 494, 294(பி), 354, 109 இ.த.ச மற்றும் உ/இ பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் மற்றும் பிரிவு 4

வரதட்சனை தடைசட்டம் ஆகிய பிரிவுகளின் கீழான வழக்கில் வாதி சுவாதி என்பவரை விசாரணை செய்து கூடுதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவின்படி மேற்படி சுவாதியை 30.06.2024 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையின்போது சுவாதி ஆஜர் செய்த 1ம் எதிரி பிரகாஷ் மற்றும் 4 ம் எதிரி ரம்யா ஆகியோர்களுக்கு பிறந்த குழந்தையின் பிறப்பு சான்றிதழ் நகல் மற்றும் மேற்படி 2 எதிரிகளின் கடவு சீட்டுகளின் முதல் பக்க நகல்களையும் பெற்றுக் கொண்டேன். மேற்படி பிறப்பு சான்றிதழின் உண்மை தன்மை அறியும் பொருட்டு கும்பகோணம் கே.ஆர்.ஜி நர்சிங் ஹோமில் கடிதம் கொடுத்தும் மேற்படி மருத்துவமனையில் 4 ம் எதிரி ரம்யாவிற்கு குழந்தை பிறந்தது உண்மைதான் என்று அவர்களின் அளித்த சான்றிதழை பெற்றுக்கொண்டேன். மேற்படி மருத்துவமனையில் மருத்துவர் T.S. சாந்தி என்பவரின் அறிக்கையை பெற்றேன். பின்னர் 1ம் எதிரி பிரகாஷ் மற்றும் 4 ம் எதிரி ரம்யா தற்போது 104, தெற்குதெரு, சூரியனார்கோயில், திருவிடைமருதூர் என்ற முகவரியில் வசிக்கவில்லை என்பதால் 49, சூரியனார்கோயில் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்றேன். மேற்படி சுவாதியின் கூடுதல் விசாரணை வாக்குமூலம் குழந்தை மகிழ்தினியின் பிறப்பு சான்றிதழ், பிறப்பு சான்றிதழின் உண்மை சான்று, கே.ஆர்.ஜி மருத்துவர் T.S. சாந்தி என்பவரின் மருத்துவ அறிக்கை, 1ம் எதிரி பிரகாஷ் மற்றும் 4 ம் எதிரி ரம்யா ஆகியோர்களின் VAO சான்றிதழ், மேற்படி 1, 4 எதிரிகளின் கடவு சீட்டு நகல் முதல் பக்கம் ஆகியவற்றை இணைத்து எனது விசாரணையை முடித்து 03.07.2024 ம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் அறிக்கையாக சமர்பித்தேன். ( **குழந்தை மகிழ்தினியின் பிறப்பு சான்றிதழ் நகல் அ.சா.ஆ. 7 ஆகவும் , குழந்தை மகிழ்தினியின் பிறப்பு சான்றிதழின் உண்மை தன்மை சான்று அ.சா.ஆ. 8 ஆகவும், கே.ஆர்.ஜி மருத்துவர் T.S. சாந்தி என்பவரின் மருத்துவ அறிக்கை அசாஆ 9 ஆகவும், 1ம் எதிரி பிரகாஷ் மற்றும் 4 ம் எதிரி ரம்யா ஆகியோர்களின் VAO**

**சான்றிதழ் அசாஆ 10 ஆகவும், மேற்படி 1, 4 எதிரிகளின் கடவு சீட்டு நகல் முதல் பக்கம் அசாஆ 11 மற்றும் 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

(எதிரிகள் தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக 03.09.2025 ம் தேதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**